**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 278/2019**

**வா.சா.1 - அமுதராணி** **08.11.2024**

**3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

**1.** நானும் எனது மகளும் சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். பாகப்பிரிவினை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளோம். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு எனது கொளுந்தன் 2ம் பிரதிவாதி பாண்டி எனது வழக்குரைஞருக்கு விபரம் சொன்னார். நான் தாக்கல் செய்துள்ள வம்சாவழி 2ம் பிரதிவாதி பாண்டி சொல்லிதான் எனது வழக்குரைஞர் தயார் செய்தார்.

**2.** வம்சாவழி ஜாபிதாவில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். மொத்தம் எத்தனை பேர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கில் எனது கொளுந்தன் பாண்டியை 2ம் பிரதிவாதியாக சேர்த்துள்ளேன். நான் வம்சாவழி ஜாபிதாவில் குறிப்பிட்டுள்ள சுப்பையா சேர்வை மற்றும் இருளாயிஅம்மாளுக்கு இறப்புசான்று மற்றும் வாரிசு சான்று தாக்கல் செய்யவில்லை.

**3.** நான் எனது திருமணத்திற்கு பிறகு சென்னையில் வசித்து வந்தேன். எனது கணவர் எனது திருமணத்திற்கு முன்பே சென்னையில் தான் வேலை பார்த்து வந்தார். எனது கணவர் 1990ம் ஆண்டு இறந்துபோனார். எனது கணவர் இறக்கும்வரை நாங்கள் சென்னையில் தான் வசித்து வந்தோம். அதன்பிறகு நானும் எனது மகளும் திருப்புவனத்தில் உள்ள எனது அண்ணன் வீட்டில் வசித்தோம். தற்போது மதுரையில் வசித்து வருகிறோம்.

**4.** எனது கணவர் சுப்பையா சேர்வை மற்றும் இருளாயிஅம்மாள் ஆகியோரின் வாரிசு என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நானும் எனது கணவரும் எந்த காலத்திலும் தாவா சொத்து அமைந்துள்ள கிராமத்தில் வசித்தது இல்லை. தாவா சொத்தை பொதுவில் வைத்து கூட்டாக அனுபவம் செய்யவில்லை. தாவா சொத்துக்கள் எந்த இடத்தில் உள்ளது பட்டா எண் சர்வே எண் ஆகியவை எனக்கு தெரியாது.

**5.** தாவா சொத்தின் விபரம் பட்டா எண் சர்வே எண் மற்றும் ஆவணங்களை எனது வழக்குரைஞருக்கு 2 ம் பிரதிவாதி தான் கொடுத்தார். சுப்பையா சேர்வையின் வாரிசுகளுக்குள் கடந்த 25.05.1978 அன்று பாகம் பிரித்து எழுதிக்கொண்ட பாகசீட்டு பற்றிய விபரம் எனக்கு தெரியாது. நான் சென்னையில் இருந்ததால் சுப்பையா சேர்வையின் வாரிசுகள் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்து அதில் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பித்து சொத்துகள் ஒப்படைப்பு செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியாது.

**6.** 3 ம் பிரதிவாதி மானாமதுரை உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 117/2003 வழக்கு தாக்கல் செய்து 02.11.2005 ல் தீர்ப்பு வழங்கப்பட்டு அதன் அடிப்படையில் 64/2010 இறுதிநிலை தீர்ப்பாணை மனு தாக்கல் செய்து அதன் பேரில் இ.பி.10/2012 நிறைவேறுதல் மனு தாக்கல் செய்து 29.07.2013 ல் தாவா சொத்துக்கள் நீதிமன்றம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியாது. மேற்படி விபரத்தை 2 ம் பிரதிவாதி 2017 ல் தான் என்னிடம் கூறினார்.

**7.** 2 ம் பிரதிவாதி தான் என்னை அழைத்து வந்து வழக்கறிஞர் மூலமாக இந்த வழக்கை தாக்கல் செய்தார். எனது கணவர் உயிருடன் இருந்த காலத்தில் சுப்பையசேர்வை மற்றும் இருளாயி அம்மாளின் வாரிசு என்ற பெயரில் சொத்துக்களை பாகம் பிரிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பாகப்பிரிவினை வழக்கு பற்றிய விபரம் எனக்கு நன்றாக தெரியும் என்றும் நான் சொத்துக்களில் பங்கு வேண்டாம் என்று ஒதுங்கிவிட்டதால் முந்தைய வழக்கில் தரப்பினராக சேரவில்லை என்றால் சரியல்ல.

**8.** ஏற்கனவே நடைபெற்ற பாகப்பிரிவினை நடவடிக்கைகளை மறைத்து விட்டு 1 , 2, 11, 12 பிரதிவாதிகளின் தூண்டுதலின் பேரில் 3 ம் பிரதிவாதிக்கு நீதிமன்ற நடவடிக்கை மூலம் பாகப்பிரிவினையில் ஒப்படைப்பு செய்யப்பட்ட சொத்துகளை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து ஏற்கனவே தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதால் இந்த வழக்கு முன் தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**9.** காலம்கடந்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை சுயமாக தாக்கல் செய்யவில்லை 1 , 2, 11, 12 பிரதிவாதிகளின் தூண்டுதலின் பேரில் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ள காரணத்தினால் தாவா வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. தாவா வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் முந்தைய பாகப்பிரிவினை வழக்கிற்கு முந்தைய

ஆவணங்கள் ஆகும் அதன்பிறகு ஏற்பட்ட வருவாய்துறை ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை